விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 | பங்குனி 1 | றஜப் 2 | இதழ் 32
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 14-3-1986

## மத்தியஸ்தத்துக்கான பிரதிநிதிகளை ஏற்றுக்கொள்ளவோ அனுப்பவோ இந்தியா தயாரில்லையாம்

(சென்னை)

இலங்கையில் அப்பாவித் தமிழர் மீது தொடுக்கப்படும் தாக்குதல்கள் நிறுத்தப்படும் வரை இவ்விவகாரம் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடாத்த தனது பிரதிநிதியொருவரை அனுப்பவோ அல்லது இலங்கை அரசினுல் அனுப்பப்படும் எந்தவொரு பிரதிநிதியை ஏற்றுக்கொள்ளவோ இந்திய அரசு தயாரில்லை என்று புதுடில்லி அரசு வட்டாரங்களை ஆதாரங்காட்டி நேற்று வெளியான 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

இலங்கைஇனப்பிரச்னையைப் பொறுத்து இந்தியா கடைப்பிடிக்கும் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு என்று புதுடில்லி

[5ம் பக்கம் பார்க்க]

## ஹெலிகொப்டர் சூடு: மயிலிட்டியில் 4 பேர்பலி!

(மாவட்டபுரப் நிருபரும், அலுவலக நிருபர் ஏ. வி. மாணிக்கமும்)

**மயிலிட்டி வடக்கில், அக்கந்தனை எனும் கிராமப் பகுதியில் நேற்றுப் பகல் மேற்கொள்ளப்பட்ட ஹெலிக்கொப்டர் தாக்குதலில் நால்வர் பலியானுர்கள்! நால்வர் படுகாயமடைந்தனர்.**

தோட்டத்தில் அறுவடை செய்த வெங்காயத்தை வீட்டில் வைத்துப் பிடிகட்டிக் கொண்டிருந்த விவசாயக் குடும்பமே பலியானதாகும்.

ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டபோது வீட்டிலிருந்த ஒன்றரை வயது ஆண்குழந்தையும், 5வயது ஆண்பிள்ளையும், பருவமடைந்த யுவதியும் ஸ்தலத்திலேயே பலியானுர்கள்.

அண்மையில் வெளிநாட்டிலிருந்து வந்திருந்த 27 வயதுள்ள இளைஞர் ஒருவரும் மரணமானுர்.

(5-ம் பக்கம் பார்க்க)

## சுவிஸ் தமிழர் நிலைமை

(பேர்ண்)

சுவிற்சலாந்தில் அரசியல் தஞ்சம் கோரியிருந்த 289 தமிழர்களை திருப்பியனுப்பும் சுவிஸ்அரசாங்கத்தின் முடிவை மீள் பரிசீலனை செய்யுமாறு அந்நாட்டின் பதினெரு அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் கோரியுள்ளன.

(5ம் பக்கம் பார்க்க)

## "தமிழ் தீவிரவாதிகளுக்கு நாம் பயிற்சி அளிக்கவில்லை"

### யாஸீர் அரபாத் அறிவிப்பு

(கொழும்பு)

''தமிழ்த் தீவிரவாதிகளுக்கு நாம் பயிற்சி அளித்து வருகிறோம் என்பதுதவருனதகவல்'' என்று பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜனுப். யாஸீர் அரபாத் அறிவித்துள்ளார்

சவூதி அரேபியாவில் இலங்

[5-ம் பக்கம் பார்க்க]

## 6 பேர் பலி: புலிகள் அறிக்கை

(திருகோணமலை)

கந்தளாய் - ஹபறணை வீதியில் ஜீப் வண்டியில் சென்ற இராணுவத்தினர் மீது தமது இயக்கப் போராளிகள் தாக்கு

[5 ம் பக்கம் பார்க்க]

## வடபகுதி விமானத் தாக்குதல் நாளை முதல் ஒருவாரம் இடைநிறுத்தம்!

### தமிழ்நாடு சென்ற அகதிகள் கடல் மார்க்கமாக திரும்பவும் ஏற்பாடு

(பி. ராஜரட்ணம்)

''வடபகுதி தீவிரவாத முகாம்கள் மீது இப்பொழுது மேற்கொள்ளப்படட்டு வரும் விமானத்தாக்குதல்கள் எதிர் வரும் சனிக்கிழமை (நாளை) தொடக்கம் சில நிபந்தனைகளின் பேரில் இடைநிறுத்தப்படும்'' என்று தேசிய பந்

(6ம் பக்கம் பார்க்க)

## முத்திரைச்சந்தியில் பலியான இருவர்: யாழ். பல்கலைக்கழகத்தில் மக்கள் அஞ்சலி

### இன்று இறுதி ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முத்திரைச்சந்தையில் ஊர்வலத்தின் மீது நடந்த துப்பாக்கிச் சூட்டில் பலியான கரணவாயைச்சேர்ந்த 14வயது மாணவி வ. தவனேஸ்வரி, பத்தைமேனியைச் சேர்ந்த விவசாயி சு. உதயபாலன் (வயது 27) ஆகியோரின் சட

(5 ம் பக்கம் பார்க்க)

## "உடனடித் தீர்வு ஏற்படுமென எனக்கு நம்பிக்கையில்லை"

### ரொமேஷ் பண்டாரி கருத்து

(புதுடில்லி)

''இலங்கைஇனப்பிரச்னைக்கு உடனடியாக ஒரு தீர்வுகாணப்படும் எனத் தாம்நம்பவில்லை'' என்று இந்திய வெளியுறவுச் செயலர் திரு ரொமேஷ் பண்டாரி இந்திய-அமெரிக்க வர்த்தகக் கவுன்சில் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

''இலங்கை இனப்பிரச்னை முனைப்படைந்ததுக்கான அடிப்படைக்காரணம் தமிழ் மக்களின் நியாயபூர்வமான அபிலாஷைகளையும், கோரிக்கை

[5ம் பக்கம் பார்க்க]

## "பத்திரிகை சுதந்திரத்தை நசுக்கவேண்டாம்"

(யாழ்ப்பாணம்)

''பத்திரிகைச் சுதந்திரம்; கருத்துச்சுதந்திரம் என்பன படுகேவலமாக நசுக்கப்பட்டிருக்கிறது இத்தகைய அடிப்படை மனித உரிமைகளை மக்கள் அனுபவிக்க சகல இயக்

(5-ம பக்கம் பார்க்க)


### உத்வாஹ சுபமுகூர்த்த விஞ்ஞாபன அழைப்பிதழ்

மாவைக் கந்தசுவாமியாரின் திருவருட் தணையால் நிகழும் குரோதன ஸு பங்குனி மீ 3-ம் நாள்(17-3-1986) திங்கட்கிழமை பகல் 11-50 மணிமுதல் 1-15 வரையிலுள்ள சுபவேளையில்,

எமது புத்திரன் **கனகசபாப்தி சர்மாவிற்கு** சகஸ்ரநாம சர்மாவின் புத்திரி **ஜெயந்தியை**

கொக்குவில் துர்க்கையம்மாள் ஆலயத்தில்

கன்னிகாதான பாணிக்கிரஹணஞ் செய்துவைக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. எமது உற்ருர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் இவ்வழைப்பினையேற்று, விவாக வைபவங்களிற் கலந்து வாழ்த்துமாறு அழைக்கின்றேம்.

17-3-86 திங்கட்கிழமை மாலை 3 00 மணியிலிருந்து இரவு 7 30வரை மணமகன் அக்கிரகாரத்தில் வரவேற்பு உபசாரங்கள் நிகழும்.


இங்ஙனம்

மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் தம்பதிகள், மாவிட்டபுரம்.

திருமதி சகஸ்ரநாம சர்மா குடும்பத்தினர், கொக்குவில்.

(C 1213)


## பண்டிதமணி ஐயா அமரரானுர் இன்று இறுதிக்கிரியை



(யாழ்ப்பாணம்)

முதுபெரும் தமிழறிஞரும், திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையின் முன்னுள் விரிவுரையாளரும் நாவலர் மரபில் சைவத்தமிழ்த்துறைக்கெனத் தம்மை அர்ப்பணித்தவருமான இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று முன்தினம் மாலை காலமானுர் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கின்றேம்.

இன்று பிற்பகல் நான்கு மணிக்கு திருநெல்வேலியில் இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

### "ஆசிரிய பரம்பரையை உருவாக்கிய கல்விப் பெருங்கடல்"

### கல்விப் பணிப்பாளர் இரங்கற்செய்தி

[யாழ்ப்பாணம்]

''நடமாடும் இலக்கியக் கலைக் களஞ்சியமாக எம்மிடையே வாழ்ந்து, கல்வி உலகிற்கு ஒளி விளக்காக நின்று வழிகாட்டிய பண்டிதமணி ஐயா அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றேன்'' என்று இலக்கியக்கலா

[5ம் பக்கம் பார்க்க]

# அசி விளம்பரம்

## விற்பனைக்கு

அக்ஷய வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் விற்பனையாகிறது. விலை ரூபா 16/- கிடைக்குமிடம்: சோதிட விலாச புத்தகசாலை, 46, பெரியகடை, யாழ்ப்பாணம், வியாபாரிகளுக்கு விசேஷ கழிவுண்டு, (C 1208)

நல்ல நிலையில் உள்ள 26 சிறி அசோக் லேலண்ட் லொறி ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டியமுகவரி: சாகிப் றேட் சென்டர், 148, கே.கே.எஸ். ரோட், யாழ்ப்பாணம். [C1211)

வீட்டுத்தளபாடங்கள், கட்டிடங்கள், மேசைகள், ஹோல் செற்றி, T.V Stand, Washing machine, Kenwood Chef, A50 கார், National RX 47 கசற் றேடியோ, Showcase, பழுதடைந்த Type Writers, Adding Machine, பெரிய சாப்பாட்டு மேசைகள், Dressing Table, கிளாஸ் வகைகள், பித்தளை, பெரிய குத்துவிளக்குகள் மற்றும்பல. ஆடியபாதம் றோட், திருநெல்வேலி வடக்கு. மருத்துவக் கல்லூரிக்கும் திருநெல்வேலிச் சந்திக்குமிடையில். [C1217]

## தேவை

அச்சுக்கூடத்தில் (Press) வேலை செய்யக்கூடிய பெண்கள் தேவை. போதிய தகமைச் சான்றிதழ்களுடன் தொடர்புகொள்ளவும். தபால்/நேரில்: 11, சீனியர் ஒழுங்கை, கலட்டி, யாழ்ப்பாணம். (C1193)

## தேவை

பஞ்சாங்கம் விற்பனையாகிறது. 86/87க்கான க்ஷய வருஷ இரகுநாத ஐயரின் வாக்கிய பஞ்சாங்கம் விலை ரூபா 16/- திருக்கணிதம் விலை ரூபா 15/-. வியாபாரிகட்கு கழிவு. V. P. P. உண்டு பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [C 1160]

உள்ளூரில் உற்பத்தியாகும் பாவனைப்பொருள்களை வீட்டுக்கு வீடு சென்று விற்பனை செய்தவற்கு 18 வயதுக்குட்பட்ட ஆண்கள் தேவை யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவராகவும், பிரமுகர் ஒருவரினால் நற்சாட்சிப்படுத்தப்படக் கூடியவராகவுமிருத்தல் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 1216 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C1216)

## வகுப்புகள்

வயறிங், வெல்டிங், ரேடியோ And ரீ. வி. மோட்டார் மெக்கானிசம், சுருக்கெழுத்து 4தட்டெழுத்துபுதிய பிரிவுகள்ஆரம்பம்:- 15-03-86. கட்டணம் மிகக் குறைவு. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். VISPA ENGINEERING, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (A 1174)

## ஒத்துமாறல்

கொழும்பில் கடமையாற்றும் கலைப்பட்டதாரி ஆசிரியை யாழ். மாவட்டத்திற்கு ஒத்துமாற விரும்புகின்றார். விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

பொ. பாலச்சந்திரன்,
37 (13), பலாலி வீதி, யாழ்ப்பாணம். (C 1206)

இன்று
மங்களகரமான
## ** திறப்பு விழா **



14-03-1986
வெள்ளிக்கிழமை
நண்பகல் 1-00 மணி
தொடக்கம்
பிற்பகல் 3-00 மணி
வரையுள்ள சுபவேளையில்

## மீனும்பிகை ஜவுளி சமுத்திரம்



மங்களகரமாகத்
திறந்துவைக்கப்படும்.
அனைவரும் அன்புடன்
அழைக்கப்படுகின்றனர்.

எஸ். தர்மபாலனும் சகோதரர்களும்,
(உரிமையாளர்) மாதகல்.

32, நவீனசந்தை, யாழ்ப்பாணம். (C 1222)

## தவறிவிட்டது

இல. 527172837, சுந்தரம் கனகமணி, தூணுவில் என்பவருடைய அடையாள அட்டை கச்சேரிக்கும் யாழ்ப்பாணத் திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கீழ் குறிப்பிட்ட விலாசத்திற்கு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தம்பி ஐயா கனகமணி, அரசடி ஒழுங்கை, இருபாலை, கோப்பாய். [C1210)

## பின்முற்றுகும் கட்டளையின் அறிவித்தல்

சாவகச்சேரி
மாவட்ட நீதிமன்றம்

சாவகச்சேரி நுணுவில் மேற்கு ''பவளவாசா'' வைச் சேர்ந்த காலஞ்சென்ற ஏனெஸ்ட் ஜெபரட்ணம் சாமுவேல் என்பவரின் மரணசாதனமில்லா சொத்துவிடயமாக.

— மரணமெய்தியவர்.

திருமதி புளோரு புஷ்பராணி சாமுவேல், நுணுவில் மேற்கு, சாவகச்சேரி.

— மனுதார்.

தத்துவ இல: 242/T

எதிராக

1. நெவில் தயாகரன் சாமுவேல், றூ, வெறூசியஸ், 62500, புளோன், சுவிற்சர்லாந்து.
2. நோயல் மனோகரன் சாமுவேல், நுணுவில் மேற்கு, சாவகச்சேரி, தற்காலம் தபால்பெட்டி இல. 10908, றியாட்த் 11443, சவூதிஅரேபியா. (1ம் 2ம் எதிர்வாதிகள் தங்கள் அற்றோணித்துவகாரன் 3ம் பிரதிவாதி மூலம்)
3. றெஜினோநட் செல்வரட்ணம் சாமுவேல், நுணுவில் மேற்கு, சாவகச்சேரி.

— எதிர்வாதிகள்.

மேலே சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் மரணசாதனமில்லா சொத்து சம்பந்தமாக மேலே குறிக்கப்பட்ட இலக்க சொத்துறுதி சார் வழக்கு இம் மன்றில் தாக்கல்செய்யப்பட்டு பின் முற்றுகும் கட்டளை பதியப்பட்டதென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எனவே எவரேனும் இதில் அக்கறை உள்ளவர்கள் இந்த நீதிமன்றில் 1986ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ந் திகதி முற்பகல் 9-00 மணியளவில் மன்றில் சமுகம் கொடுத்து பின் முற்றுகும் கட்டளை ஏன் முற்றுன கட்டளை ஆக்கக்கூடாது என்பதற்கு ஏதேனும் காரணமிருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்கள்.

1986ம் ஆண்டு மாசி மாதம் 20/21ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி

ஆ குணநாயகம்
பதிவாளர்.

வரைவு:
வீ. பொ. கார்த்திகேசு
J. P. U. M.
மனுதாரின் சட்டத்தரணி.
C 1151

## இடமாற்றம்

[சித்தன்கேணி]

சங்கானை உதவி அதிபர் பணிமனையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய திரு. ஆ கதிரமலைநாதன் இம்மாதம் தொடக்கம் மட்டக்களப்பு அரசாங்க செயலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளார்.

## நியமனம்

[அராலி]

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உப அலுவலகம் அராலிக்கு நடுகட்டும் உத்தியோகத்தராக திரு சி. ஏரம்பு மூர்த்தி நியமனம் பெற்றுள்ளார்.

O. L. M, Ismail,
Attorney-at-law,

Channel Lane.
Trincomalee.

### NOTICE OF ORDER NISI IN THE DISTRICT COURT OF TRINCOMALEE

In the matter of Last will and Testame t of the late Velupillai Ganesh of 34, George Street, Trincomalee. — Deceased.

Testamentary Jurisdiction
Case No: T/574.

Ganesh Selvaratnam of 34, George Street, Trincomalee. — Petitioner.

It is hereby notified that the above numbered Testamentary action has been instituted in the above Court for probate of the Estate of the abovenamed deceased and Order Nisi has been entered accordingly therenin.

Any person intere ted is hereby required to appear before this Court on the 27th day of March, 1986 at 9'o Clock in the forenoon and show cause if any, why the Order Nisi should not be made absolute.

By Order of Court.

K. Mahendrarajah,
Registrar.
D. C.,
Trincomalee.

Dated:-
The 14th day of February, 1985.

[C-1218]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி மகேஸ்வரி இளையதம்பி

தோற்றம்: 15-5-1931
நிறைவு: 12-2-1986
வீட்டுக்கிருத்தியம்:
14-3-1986

வெள்ளிக்கிழமை எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த உத்தபத்தலைவியின் ஆத்ம சந்திக்காகப்பிரார்த்திக்கும்:

கணவன்
சு. இளையதம்பி,
மக்கள், மகளிர்,
மருமக்கள், பேரர்,
சகோதர, சகோதரிகள்
குடும்பங்கள்.

27, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.
[C-1204)

## வானொலிப்பெட்டி அன்பளிப்பு

[சுழிபுரம்]

வட்டுக்கோட்டை லயன் கழகத்தினர். சுழிபுரம் காட்டுப்புலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு புதிய வானொலிப் பெட்டியொன்றை அன்பளிப்புச் செய்துள்ளனர் சுழிபுரம் காட்டுப்புலம் பகுதிவாழ் தொழுநோயாளர்களின் பிள்ளைகள் இப்பாடசாலையில் கல்வி கற்கின்றனர்

## அமைப்பாளராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கதீப்மார்கள் சம்மேளனத்தின் யாழ் மாவட்ட அமைப்பாளராக யாழ்மாவட்ட உலமா சபையின் செயலாளர் மௌலவி ஏ. எம் அப்துல் அஸீஸ் (காஸிம்) நியமிக்கப்பட்டார். மௌலவி அப்துல் அஸீஸ் புதிய சோனகத்தெரு மஸ்ஜிதுல் அபூபக்கரின் பேட் இமாமாகவும் அல்மதுரஸதுல் ஸலமிய்யாவின் அதிபராகவும் கடமையாற்றுகின்றார்.

## புதிய நிர்வாகிகள்

[சாவகச்சேரி]

கைதடி நுணுவில் சன சமூக நிலையத்தின் புதுவருட நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் திரு. க. சண்முகலிங்கம், செயலாளர்திரு அ சிவசிங்கம் பொருளாளர்திரு. க நடேசு மற்றும் 6 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்லத்துரை பெரம்பலம்

(முன்னாள் உபதபாற் கந்தோர் அதிபர், முன்னாள் கிராமசபை உறுப்பினர், ராமாவில, சினகை கோயில்களின் தர்மகர்த்தா)

தோற்றம்: 28-4-1923
மறைவு: 14-3-1985

எங்கள் இதயங்களைப் பிழிந்து எடுத்துக் கொண்டிருக்கும் அன்புத்தெய்வமே! உங்கள் பிரிவால் ஊமையாகி விட்ட இறைவனைப் பேசும்படி இறைஞ்சுகிறோம்

அன்னாருக்கான விசேட சமயக் கிரியைகள் 14-3-86 வெள்ளி (இன்று) குடும்பத்தவரால் அர்ப்பணம் செய்யப்படும்.

மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.
(C1173)

### மணிவாக்கு

நாம் இரகசியமாகக் குற்றம் செய்யும்போது பிறர் நம்மைக் கண்டியாவண்ணம் தப்பிக்கொள்வோமாயினும் நம்முடைய மனம் நம்மைக் கண்டியாவண்ணம் தப்பிக்கொள்ளமாட்டோமே!

— ஆறுமுகநாவலர்

## நமது நோக்கு

# சீனத்தலைவரின் இலங்கை விஜயம்

சீனக்குடியரசின் தலைவர் லீஸியநியன் உத்தியோக முறையில் கடந்த 11ம் திகதி முதல் விஜயம் ஒன்றை மேற்கொண்டதின் பின் இன்று எகிப்துக்குப் புறப்பட்டுச் செல்கின்றூர்.

இன்றைய இலங்கை அரசின் தவறான போக்குகளால், இந்நாட்டின் மிக முக்கிய ஒரு பகுதியினரான தமிழர் பிரச்னை பூதாகாரமாக விகாரமடைந்ததின் காரணமாக அண்டை நாடான இந்தியாவுடன் உறவுகள் சீர்குலைந்துவரும் இந்த வேளையில் சீனத்தலைவரின் விஜயம் இங்குள்ள அரசியல்வாதிகளுக்குப் பெரும் உற்சாகத்தையும் உத்வேகத்தையும் அளிக்கக்கூடும் என்று கருதப்படுகின்றது. ஆனுல் சர்வதேச அரசியல் அரங்கினை உன்னிப்பாகக் கவனித்துவருபவர்கள் எந்த ஒரு நாட்டிலும் ஓர் இனம் இன்னொரு இனத்தை நசுக்கும் செயல்களுக்கு சீனமக்கள் ஆதரவளித்து வருவதற்கான ஆதாரம் இல்லை அரசுக்கு அரசு மதிப்பளிப்பதும், ஒன்றின் விவகாரங்களில் மற்றது தலையிடாதிருப்பதும் சீனுவின் நெடுநாளைய கொள்கையாக இருந்துவருகின்றது இப்பிராந்தியத்தில் உள்ள பல நாடுகளுக்கு பிரயாணம் மேற்கொள்ள ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டிருந்த திட்டத்தின் அடிப்படையிலேயே இந்த விஜயம் அமைகிறதேயன்றி இங்கு எழுந்துள்ள அரசியல் நிலைமைகளின் நிமித்தம் விசேஷமாக மேற்கொள்ளப்பட்டதாகக் கருத முடியாது. மேலும் ஏற்கெனவே இலங்கை ஜனதிபதி சீனுவுக்கு சென்று வந்ததற்கு பதில் விஜயம் ஒன்றை மேற்கொள்வதும் சீனத் தலைவருக்குரிய கடமையாகவிருந்தது.

எனவே தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் ஹெலிகொப்டர்கள் மூலமும், சண்டை விமானங்கள்மூலமும் குண்டுகளை வீசப் பொதுமக்களைக் கொன்றெழிக்கும் கண்மூடித்தனமான இலங்கை அரசின் நடவடிக்கைகளுக்கு 'ஆசி' வழங்கிவிட்டு அவர் செல்வதாக எவரும் கருதவேண்டிய அவசியம் இல்லை.

1984ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி சீனுவில் 1,034,907,000 மக்கள் வாழ்கிறூர்கள். இவர்களில் பெரும்பான்மையோர் ஹான் சீன இனத்தவர். மங்கோலிய, கொரிய, மஞ்சூரிய போன்ற இனத்தவர்கள் ஏனையோர். அங்கு சீனம், ஷாங்காய்கான்ரன், புக்கீன், ஹக்கா, திபேத் போன்ற பல மொழிகள் பேசப்படுகின்றன அரசாங்க மதமோ அரசஆதரவுபெற்ற சமயமோ கிடையாது. கான் பூசியஸம், பௌத்தம் போன்ற நல்மரபுவழி மதங்கள் உண்டு.

இங்ஙனம் பல்லின, பன்மொழி அமைப்புக்களைக் கொண்ட சீனமக்கள் குடியரசு மொழி, இன, மத அடிப்படையில் ஏனைய நாடுகளில் எழும் பிரச்னைகளை உணராமல் இருக்க முடியாது. உண்மையில் சீனுவில் முன்னுளில் வழக்கொழிந்துபோன மொழிகள் எல்லாம்கூட இன்று புத்துயிர் ஊட்டி வளர்ப்பதற்கு முயற்சிகள் நடப்பதாக அறிகின்றேம்.

ஒரு நாட்டின், ஒரு பிரதேசத்தின் ஓரினமக்கள் தனித்துவமாகப் பேணிவரும் மொழி, மத, கலை, கலாசார, பாரம்பரியங்களை அழிப்பதற்கும் அப்பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்களை உருவாக்கி குறித்த மக்களை சிறுபான்மையாக்கி சீரழிப்பதற்கும் சீனக் குடியரசில் திட்டங்கள் தீட்டப்படுவதாக நாம் அறியோம்.

எனவே இந்த நாட்டில் தமக்கு இழைக்கப்பட்டுவிட்ட அநீதியை அகற்றி தமது தனித்துவத்தை நிலைநாட்டிக் கொள்ள போராடிவரும் தமிழ் இனத்தவர்களின் உண்மை நிலையை சீனத்தலைவர்கள் உணரத் தவறிவிடுவார்கள் எனக் கருத இடமில்லை.

பாகிஸ்தானிலிருந்து பிரிந்து தனியாக இயங்கும் பங்களாதேஸிற்கு நல்லெண்ண விஜயம் மேற்கொண்டுவிட்டு இங்கு வந்திருந்த சீனத்தலைவர், இங்கும் அதே மாதிரியான ஒரு நிலைமை தலையெடுத்திருப்பதைஉணர்ந்திருப்பார் என்றுகொள்ளலாம் இன்று தமிழ்ப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்ய அவரால் முடியாது போனுலும் இன்னெருகாலத்தில் அமைதிச் சூழ்நிலையில் அப்படியான ஒருவருகை நிகழ்வது அசாத்தியமில்லை.

# இந்த அகதிகளுக்கு தற்காலிக முகாம்
## வவனியா பிக்கு உதவி

(வவனியா)

வவனியா மன்னூர் வீதி கணேசபுரம், கண்ணுட்டி, பறையன் ஆலங்குளம் கிராமங்களில் அண்மையில் இடம் பெற்ற அசம்பாவிததத்தினை அடுத்து இடம்பெயர்ந்த மக்கள் பெரியதம்பனை அரசினர் பாடசாலையில் தற்காலிகமாக இருவாரத்திற்கு தங்குவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

புதியஅகதிமுகாம்கள் வவனியாவில் அமைக்க கூடாது என்ற மேலிடத்து உத்தரவு இருந்தபோதும் அரச அதிபருடனும் இங்குள்ள இராணுவ உயர் அதிகாரிகளுடனும் வவனியா விகாரை பிரதம பிக்கு சீயம்பலகஸ்வ விமலசார தேரோ தொடர்புகொண்டதின் பயனுக குறித்த வெளியேறிய மக்கள் தற்காலிகமாக இருவாரத்திற்கு பாடசாலையில் தங்கி இருப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என நம்பகரமான வட்டாரங்கள் கூறின.

அத்துடன் இந்த அகதிகளுக்கு இருவாரத்திற்கு உணவுப் பொருள்களை வழங்கவும் கச்சேரி சமூக சேவை இலாகா முன்வந்துள்ளதாக கச்சேரி அதிகாரி ஒருவர் கூறினுர்.

இராணுவ அத்துமீறல்கள் வவனியாவில் தொடருமானுல் அகதிகளாகும் மக்கள் தொகையும் அதிகரிக்கும். அத்துடன் இப்படியாக அதிகரிக்கும் மக்களுக்காக புதிய அகதி முகாம்களை நிறுவவேண்டிய ஒருசூழ்நிலை ஏற்படலாம்.

எனவே புதிய அகதி முகாம்கள் அமைக்கக்கூடாது என்று கூறுவதாயின் பாதுகாப்பு படையினரை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டியதின் அவசியத்தினை மேற்படி பிக்கு இங்குள்ள இராணுவ உயர் அதிகாரிகளிடம் வலியுறுத்தி கூறியுள்ளதாக அறிய முடிந்தது.

அதேநேரத்தில் மக்களுக்கு வீண் அசம்பாவிதங்களில் ஈடுபடாமல் அமைதியினை நிலைநாட்டும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# "ஆசிரியர் சம்பளத்தாமதம் விரைவில் தீர்க்கப்படும்"
## – யாழ் கல்விப்பணிப்பாளர்

(மானிப்பாய்)

சம்பளத்தைப் பெற்றுக்கொள்வதில் அதிபர்கள ஆசிரியர்கள் சில வருடங்களாக அனுபவித்துவரும் சிரமங்களை நீக்கத்தாம் விரைவானதொரு நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும், ஒவ்வொரு வட்டாரக் கல்வி அதிகாரி காரியாலயத்திலிருந்தும் இவற்றை இனிப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யவிருப்பதாகவும் யாழ். கல்வப்பணிப்பாளர் திரு. இ சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இணுவில் பொதுமக்கள் சார்பில் தமக்களிக்கப்பட்ட பொது வரவேற்பின் போது பதிலுரை வழங்குகையிலேயே திரு. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு கூறினுர்.

இணுவில் அ. மி. த. க பாடசாலை அதிபர் திரு. செ. சோதிப்பெருமாள் தலைமையில் இராமநாதன் மண்டபத்தில் நடைபெற்ற இவ்வரவேற்புபசாரக் கூட்டத்தில் அவர் தொடர்ந்துபேசுகையில் ஆசிரியர்கள் தத்தமது தேவைகளுக்காக கல்விக்கந்தோரில் வந்து அதிகநேரம், காத்து நிற்கவேண்டிய நிலையை கூடியளவுமாற்றதம்மாலானவற்றை தாம் செய்ய விருப்பதாகவும் தெரிவித்தார்.

தமது முழுநேரத்தையும் ஆசிரியர்கள் பாடசாலையிலிருந்து தமது மாணவரது கல்வி வளர்ச்சியிலேயே கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

யாழ் மாவட்ட மாணவர் கல்விநிலை இன்றையசூழ் நிலையில் இருட்டினுள் இருப்பது போன்றதொரு நிலையிலிருப்பதாகவும், இதனைப்பிரகாசிக்கச் செய்ய சம்பந்தப்பட்ட சகலரும் இயன்றளவு பாடுபடவேண்டுமெனவும், கிராமப்புறக் கல்வி வளர்ச்சியில் இன்னும் கூடுதலான அக்கறை செலுத்தப்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

ஒவ்வொரு தொகுதியிலும் சகலவசதிகளும் கொண்ட ஒரு பாடசாலை ஆயினும் உருவாக தாம் இயன்ற முயற்சி எடுக்கப்போவதாகவும் அவர் கூறினுர்.

பேராசிரியர் திரு. எஸ். சந்திரசேகரம், கலாநிதி சபா ஜெயராஜா, வித்துவான் சபா ஆனந்தர், யாழ் மாவட்ட இ த ஆ ச. செயலாளர் திரு சி. சிவபாலசிங்கம் ஆகியோரும் பேசினர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# "ஒற்றுமைதான் எதிர்கால சமுதாயவளர்ச்சிக்குஉதவும்"
## -பிரான்சிஸ் அடிகள்

(யாழ்ப்பாணம்)

''ஒவ்வொரு பங்கிலுமுள்ள சிறுவர்கள் சமாதானம், நல்லொழுக்கம், அன்பு, காருண்யம் உள்ளவர்களாக ஒற்றுமையாக இருப்பது அவசியம் ஒற்றுமைதான் எதிர்கால சமுதாயத்தை நல்வளர்ச்சி அடையச் செய்யும்.''

இவ்வாறு பாஷையூர் பங்குத் தந்தை அருட்திரு பிரான்சீஸ் அடிகள், சிறுர்களின் ஒன்றிணைப்பு விழாவில் பேசும்போது கூறினுர்.

இச்சிறுவர் ஒன்றிணைப்பு விழாவில், பாஷையூர்பங்கைத் தலைமையாகக் கொண்டுள்ள அரியாலை, மணிப்புரி, வசந்தபுரம், எழிலூர், வழன்புரம், கொழும்புத்துறை ஆகிய பங்குத் தலங்களைச் சேர்ந்த சிறுர்கள் பங்குபற்றினுர்கள்.

கொழும்புத்துறை செபமாலை மாதா ஆலயமுன்றலில் பங்குத்தந்தை கொடியேற்றி, மங்கல விளக்கேற்றி இவ்விழாவை ஆரம்பித்து வைத்தார் விழாவில் புனிதவளனுர் பெரியகுருமட அதிபர் அருட்திரு டேமியன் அடிகள், உதவிப் பங்குத் தந்தை அருட்திரு ஸ்ரனீ அடிகள், மற்றும் அருட்சகோதரர்களும் கலந்து கொண்டு மங்கல விளக்கேற்றினுர்கள்

மறைக்கல்வி கற்கும் மாணவர்கள் கலைநிகழ்ச்சிகளை நடாத்தினுர்கள். சிறுர்களின் ஒன்றிய வளர்ச்சிக்காகத் திருப்பலிப் பூசை நடைபெற்றது.

இறுதியில் உதவிப் பங்குத் தந்தை அருட்திரு ஸ்ரனீ அடிகள் அனைவர்க்கும் நன்றி கூறினுர். ஐ)

# நியமனமும் சான்றிதழ் வழங்கலும்

[வண்ணார்பண்ணை]

யாழ். மாவட்ட இந்து இளைஞர் தொண்டர் பிரிவு மாவட்ட ஆணையாளர், மாவட்ட உதவி ஆணையானர் பிரிவு, உதவி ஆணையாளர்கள் நியமனம் வழங்கல் நிகழ்ச்சியும் கடந்த மூன்று வருடங்கள் தொண்டர் சேவையிலீடுபட்டவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியும் இம்மாதம் 30ம் திகதி நடைபெற இருக்கிறது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இந்த நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை செய்துவருகிறது.

## வவனியாவில்
# இரு சமூகத்தவரும் அடங்கிய குழு

(வவனியா)

வவனியாவில் அவசியமின்றிக்கைதாகும் சாதாரணபிரஜைகளுடைய நலனைக் கவனிப்பதற்கு இங்கு இரு சமூகத்தினரையும் கொண்ட குழு ஒன்று அண்மையில் சர்வோதயத்தின் அனுசரணையுடன் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

குழுவின் அமைப்பு உத்தியோகத்தர்களாகத் தெரிவாகியுள்ளோர் விபரம்:-

இணைத்தலைவர்கள்:- வவனியா பௌத்த விகாரை பிரதம பிக்கு சீயம்பலகஸ்வ விமலசாதேரோ, திரு. கி. பத்மநாதன் (மரணவிசாரணை அதிகாரி), இணைக்காரியதர்சிகள்;- திரு.வி.குகேந்திரன் (வவனியா அகதிகள் புனர்வாழ்வுக் கழகச் செயலாளர்), திரு. ஏ. ஜயதிலக, தனுதிகாரி;- திரு. க. கதிரமலை (வடபிராந்திய சர்வோதய இயக்குநர்)

''வன்னி சமாதான முன்னணி'' என்பதே இக்குழுவின் பெயராகும் என அறிவிக்கப்பட்டது.

திட்டமிட்டுக் குடியேற்று தலை நிறுத்துதல் ஒரு பகுதி மக்களுக்கு ஆயுதங்கள் வழங்குதலைத் தடுத்து நிறுத்தல், அசம்பாவிதத்தினை அடுத்து இடம்பெயர்ந்த மக்களுக்குப் புனர்வாழ்வு அளித்தல் போன்றனவையே இக்குழுவின் பிரதான நோக்கமாக உள்ளது என திரு. கதிரமலை தெரிவித்தார்.

நிர்வாகக் குழுவில் வவனியா, முல்லைத்தீவு, மன்னுர், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த பல்கலைக் கழகப் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# கும்பாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

மறவன்புலோ புலோக்காடு ஸ்ரீ நரசிம்மவைரவசுவாமிகோவில் மகா கும்பாபிஷேகம் 17ம் திகதி திங்கட்கிழமை காலை நடைபெறும்.

சிவஞானபாஸ்க்கரன் சிவஸ்ரீ ச. சோ. வாகீஸ்வரக்குருக்கள் பிரதமகுருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நிகழ்த்தி வைப்பார். (ப)

# சூராவத்தை அம்பாள் ஆலய இலக்ஷார்ச்சனை

[சுனுகம்]

சூராவத்தை, சுன்னுகம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இலக்ஷார்ச்சனையும் இலக்ஷஓமமும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெற்று பதினேராம்நாள் சங்காபிஷேகம் நடைபெறும்.

அன்று அம்பாள் பூந்தண்டிகையில் வீதிவலம் வரும் திருக்காட்சியும் இடம் பெறும்

# "நயினாதீவு சம்பவம் மனித உரிமைகளை மீறும் செயல்"

(யாழ்ப்பாணம்)

'நயினாதீவு தாக்குதலின் போது கோயில் காசாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டது மனித உரிமைகளை மீறும் மிகமிகக்கொடூரமான செயலே தவிர வேறொன்றுமில்லை. இத் துயரச் சம்பவங்களுக்குப் பின்னர் நயினை நாக பூஷணி அம்பிகைக்குரிய நித்தியகாலப் பூசைகள் தடைப்பட்டுள்ளமை இந்துக்களது உள்ளங்களில் தாங்கொணாதவேதனையை அளிக்கிறது.''

யாழ். பல்கலைக்கழக இந்து மன்றத் தலைவர் திரு. செ. ஞானசேகரன், செயலாளர் திரு. ப. கணேசலிங்கம் ஆகியோர் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது.

''நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் து மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட அராஜகத்தைக் கண்டு இந்துக்கள் மனக்கொதிப்பு அடைந்துள்ளனர். நயினை நாகபூஷணி அம்மன் கோவில் ஈழத்து வரலாற்றுபுகழ் திருத்தலங்களில் ஒன்று என்பதைய ருமறிவர். போர்த்துக்கேயர்போன்றவெளிநாட்டார் இந்நாட்டில் கால் வைத்து பிரசித்தி பெற்ற இந்துத் தலங்களைச் சிதைத்த போதும் கூட நயினை அம்மனை ஆலய அர்ச்சகர் ஆலமரப்பொந்தொன்றில் வைத்துப் பாதுகாத்தார் என்ற செவி வழிச் செய்தி இற்றை வரை எவராலும் அம்மண் தீண்டப்படவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

துரதிஷ்ட வசமாக அந்நியர் நம்மை விட்டுச் சென்றாலும் நம்மவர் ஆட்சியும் ஜனநாயகமும் தழைத் தோங்கும் நாடு எனப் பறை சாற்றும் இவ்வேளையில் இராணுவ அத்துமீறல் மத நிறுவனத்தையும் விட்டு வைக்கவில்லை என்று எண்ணும் போது மனம் குறுகிறது. சிப்பாய்கள் அம்மனின் திருமேனியைத் தொட்டது மட்டுமன்றி அம்மன் அணிந்திருந்த நகைகளையும் அபகரித்து ஆலயத்தை மாசு படுத்திவிட்டனர். அத்தோடமையாது ஆலயத்தின் விலைமதிபபுக்குரிய கலைச் செல்வங்களான தேர்கள், மஞ்சம், கோயிலின் பிரதான வாயிற் கதவு, சப்பறம் போன்றவற்றிற்கும் தீ வைத்துக் கொளுத்திய நிகழ்ச்சி அநாகரிகர்கள் கையில் நாம் வாழ்கின்றோமோ என்று எம்மை சிந்திக்க வைக்கிறது. எம் மதமும் சம்மதம் என்ற கோட்பாடு நிலை கொண்டுள்ள இக் காலத்தில் சமய நிறுவனங்களை அழிப்பது சமய மாற்றம் செய்ய நினைப்பது மிக மிக காட்டு மிராண்டித் தனமாகும். [க]

# கட்டுத்துவக்கு வெடித்து பெண்பலி!

(யாழ்ப்பாணம்)

நெடுங்கேணி பெரியகுளத்தடியில் கட்டுத்துவக்குவெடிக்கு ஒரு பெண் பலியானார்.

நெடுங்கேணியைச் சேர்ந்த எஸ். தங்கம்மாவின் [55வயது] மரணவிசாரணையில் இத்தகவல் தெரியவந்தது. யாழ்.மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் மரணவிசாரணை நடத்தினார்.

இறந்தவர் மகன் வீட்டில் வசித்துவந்ததாகவும், வீட்டைச்சுற்றிக் காடுகள் இருந்ததாகவும்- சம்பவதினம் இவர் காட்டுப்பகுதிக்கு சென்று சிறிது நேரத்தில் வெடிச்சத்தம், அதைத்தொடர்ந்து அலறல் சத்தம் கேட்டதாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

நெடுங்கேணி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார். பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு, விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (க)

## தவக்காலச் சிந்தனை



24-ம் நாள்

மனிதனாக பிறந்த ஒவ்வொரு மனிதனும் இறைவனின் பிள்ளை பிள்ளைகளை தனது அன்பிலும் அரவணைப்பிலும் வைத்து பாதுகாத்து வருகின்றார். இறைவன் மனவுரு எடுத்து மக்களை பாவத்தின் பிடியில் இருந்து மீட்டு வழி காட்டினார். வாழ்க்கையிலே உள்ளம் நொறுங் குண்டவர்களை நொந்து வாழக் கதி அற்றவர்களை தேடி வந்தார். அவர்கள் இன்பத்தில் நண்பனாகவும், துன்பத்தில் துயர் துடைப்பவனாகவும் இருந்து ஆறுதல் அளித்து வருகின்றார் மனித பலவீனங்களுக்கு மன்னிப்பு அளித்து புது வாழ்வு வாழ அவர்களை இட்டுச் செல்கின்றார்.

இறைவன் மனிதனாகப் பிறந்து மனிதனோடு ஒன்றித்து அவனது இன்பத்திலும் துன்பத்திலும் ஒன்றிணைந்து வாழ்ந்தார். மனிதப் பண்புகளோடு சமத்துவமாக வாழ்ந்தாரேயன்றி வேற்றுமை பாராட்டவில்லை. மாதிரிகையாகத் திகழ்ந்தார். எனவே மனிதன் ஒவ்வொருவனும் இறைவனின் படைப்பு சாதி, சமயம், மொழி, இடம் அந்தஸ்து அவனது வாழ்க்கையை எடை போட முடியாது போட்டி மனப்பான்மையும் பொறாமையும், வேற்றுமைகளும் வேரோடு அழிந்து, மனித உள்ளங்களில் அன்பு வளர்ந்து மனித மாண்போடு மதித்து வாழுவோம். எல்லோரையும் சகோதரனாக அயலானாக குறை நிறைகளோடு ஏற்று வாழ்ந்து மனித பண்பில் மேம்படுவோம். இறைவனின் அழைப்பையேற்று நல் மனத்தோடு வாழ்ந்து இறை ஒன்றிப்பில் இணைவோம்.

- அருட் சகோ. அற்புதராஜா.

LANKA CEMENT LIMITED
KANKESANTHURAI.

நீண்டகால ஒப்பந்த அடிப்படையில் சுண்ணாம்புக்கல் காங்கேசன்துறையில் உள்ள எமது கற்குழியில் உடைத்து எடுப்பதற்கானதும் அவற்றை 2 கி. மீ. தூரத்தில் உள்ள எமது கல் நொருக்கி இயந்திரத்திற்கு எடுத்துச் செல்வதற்குமான

அழைப்பு:

நாள் ஒன்றுக்கு 3000 தொன் சுண்ணாம்புக் கற்களை காங்கேசன்துறையில் உள்ள எமது கற்குழியில் இருந்து பாரிய இயந்திரங்கள் மூலம் உடைத்து கனரக வாகனங்களில் ஏற்றி 2 கி. மீ தூரத்திலுள்ள எமது கல்நொருக்கி இயந்திரத்திற்கு காலை 7-00 மணிக்கும் மாலை 5-00 மணிக்கும் இடையில் இறக்குதல்.

கற்களை உடைப்பதற்கும் அவற்றை அள்ளி கனரக வாகனங்களில் ஏற்றுவதற்குமான பாரிய வாகனங்களை வேலைக்கு அமர்த்தக்கூடிய கைதேர்ந்த ஸ்தாபனங்கள் அல்லது ஒப்பந்தகாரர்கள் மேற்படி விடயமாக நீண்டகால ஒப்பந்தத்தை செய்வதற்கு வேண்டிய தொழில்நுட்ப மற்றும் தகவல்களைப் பெறுவதற்கு எமது தொழிற்சாலை முகாமையாளரை அவரது காரியாலயத்திலோ அல்லது பொதுமுகாமையாளரை 251, தர்மபால மாவத்தை, கொழும்பு 7ல் உள்ள லங்கா சிமென்ற் லிமிட்டெட் காரியாலயத்திலோ காரியாலய நேரத்தில் சந்திக்கும்படி அன்புடன் வேண்டிக் கொள்ளுகிறோம்.

பொதுமுகாமையாளர்,
லங்கா சிமெந்து லிமிட்டெட்
காங்கேசன்துறை.

(A 360)

# அல்குர்ஆன் பிரதிகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கதீப்மார்கள் சம்மேளனத்தின் சார்பில் யாழ். மாவட்ட பெரியகடை முஸ்லிம் லீக்கினரின் அனுசரணையுடன் முஸ்லிம் சிறுவர் சிறுமியர்களுக்கு அல்குர் ஆன் பிரதிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

அகில இலங்கை கதீப்மார்கள் சம்மேளனத்தின் தலைவரும் யாழ். பல்கலைக்கழக அரபு இஸ்லாமிய நாகரிகத் துறை விரிவுரையாளருமான அல் ஹாஜ் மௌலவி கே. எம். எச். காலிதீன் இவ் வைபவத்தில் உரையாற்றினார்.

திருக்குர் ஆன் பிரதிகளை பெரியகடை ஜும்மா மஸ்ஜிதின் பிரதித் தலைவர் பேமஸ் ஜனாப் முஹம்மது வாப்பு, நம்பிக்கையாளர் சபை உறுப்பினர் ஜனாப் எம். ஸாஹுல் ஹமத், முஸ்லிம் லீக் சார்பில் தலைவர் கே. சனூன் ஆகியோர் அன்பளிப்புச் செய்தனர். முஸ்லிம் லீக் கிளையின் செயலாளர் ஜனாப் எம். எம். நஜீப் நன்றியுரை கூறினார்.

# தலைநகரிலுள்ள சட்டத்தரணிகள் 'பாசறை'யும் கலைக்கப்படுகின்றது!

(கொழும்பு)

சட்ட அனுபவங்களின் 'பாசறை'யாகக் கருதப்படும் ஹல்ஃப்ஸ்டோப்பிலிருந்து 47 சட்டத்துறை அறிஞர் அலுவலகங்களை உடனடியாக அகற்ற உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தஅலுவலகங்களைப்புதிய ஸ்தலங்களில் அமைப்பதற்கென அரசாங்கம்மேற்கொண்டுள்ள முயற்சிகள் குறித்து சட்டத்தரணிகளின் பிரதான ஸ்தாபனமான சட்டத்தரணிகள் சங்கம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

தமது உறுப்பினர்களுக்கென புதிய அலுவலகங்களுக்கு இடங்களை ஒதுக்கீடு செய்த விதத்தை மேற்படி சங்கம் பலமாக ஆட்சேபித்துள்ளது.

அரசாங்கம் உதவிசெய்யாத பட்சத்திலும் தமது அலுவலகங்களை வசதியான இடங்களில் அமைக்க சட்டத்தரணிகள் சங்கம் கால அவகாசம் கேட்டு கோரிக்கை விடுத்துள்ளது. (ஷ)

# இன்றைய பலன்

மாதம் — பங்குனி
திகதி — 1(14 3-1986)
கிழமை — வெள்ளி
திதி — சதுர்த்தி பி. இரவு வரை
நக்ஷத்திரம் — அச்சுவினி பி. ப. வரை

மேடம்:- எதிலும் தாக்க மனப்பன்மை உருவாகும். எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும். சிலருக்குஎதிர் பாராத விதமாக உடல் நலம் பாதிக்கப்படும் பொறுமை அவசியம்.

இடபம்:- வாழ்க்கை இன்று அமைதியாகச் செல்லும், எண்ணம் போல் யாவும் நடக்கும் உறவினகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் அரசியலில் பிரகாசிக்க இடமுண்டு.

மிதுனம்:- சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள். காத்திருந்த கண்களுக்கு களிப்பூட்டும்விருந்தொன்று கிடைக்கும். மகிழ்ச்சியான தினம்.

கடகம்:- கௌரவத்தைப் பாதிக்கக்கூடிய சம்பவம் இடம் பெறலாலம் பெரியவர் ஒருவருடன் பகைத்துக்கொள்ள நேரிடலாம் எதிலும் முன் யோசனையுடன் செயலாற்றவும், இறைவழிபாடு விரும்பத்தக்கது.

சிங்கம்:- களஸ்திரசுகமுண்டு காதலர்களுக்கு கன குஷியான தினம் கண்ணியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள் எதிலும் சாதகமான சூழ்நிலை உருவாகும்.

கன்னி:- நம்பிக்கை மோசடி நடக்கும் நண்பர்களும் காலை வாரிவிடுவர். தீர்க்கமான சிந்தனையே சிறப்பைத்தரும்.

துலாம்:- குளறுமையான சம்பவங்கள் இடம் பெறும். வாழ்க்கையில் பசுமை தோன்றும் களஸ்திர வழியால் நன்மையுண்டு.

விருச்சிகம்: தொல்லைகள் அலைமோதும், மனநிம்மதியைத் தேடியலைவீர்கள். குடும்பத்திலும் சிறு பிணிக்கு இடமுண்டு.

தனுசு:- புதிய நண்பர்களைத் தேடிக் கொள்வீர்கள். விருந்துபசாரத்திற்கும் இடமேற்படலாம். காதலர் வாழ்வில் கற்கண்டான தினம்.

மகரம்:- புதிய தொழில் மூலம் இலாபம் கிடைக்கும் புத்திரர்களுடைய செல்வாக்கும் பெருகும். புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும். பூமியால் முன்னேற்றமுண்டு.

கும்பம்:- மோதவரும் பகை மோசடி நடக்கும் மனதில் அமைதி குன்றும். பண விவகாரத்தில் அதிக கவனம் செலுத்தவும்.

மீனம்:- வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று, வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தரலாம். பெரியோர்களைப்பகைத்துக் கொள்ளாது பொறுமையைப் பேணி நடக்கவும்.

திருமலை
வே. ரவீந்திரன

## ரூபவாஹினி

காலை:
10-00 இலங்கை - பாக் அணிகளுக்கிடையில் 2 வது டெஸ்ட் போட்டி

மாலை:
5-25 செய்திகள்
5-30 மலரும் அரும்புகள்
6-00 யப்பானின் இயற்கை' (விவரணம்)
6 30 செய்திகள் (தமிழ்)
6-55 'ஸ்வர சங்கலன' (இசை)
7-25 'குரங்கு'
8- 0 செய்திகள் (சிங்களம்)
8-:0 'குரங்கு' (தொடர்ச்சி)
8-45 மரங்கள் பற்றிய விவரணம்
9-00 செய்திகள் [ஆங்கிலம]
9-25 நடப்பு நிகழ்ச்சி
9-45 இசை வழு
11-45 ஒளிபரப்பு முடிவு

# இடமாற்றம்

[அராலி]

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைஅராலி உப அலுவலகத்தில் கடமையாற்றிய திரு செ. .. லய காரிய சேவகராக பண் ... அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

## முத்திரைச்சந்தியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லங்கள் நேற்று நண்பகல் யாழ் பல்கலைக்கழகத்திற்கு யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து எடுத்து வரப்பட்டு மக்கள் அஞ்சலிக்காகச் வைக்கப்பட்டது.

வெள்ளை வேட்டி, வெள்ளை ஷேர்ட் அணிந்து உதயபாலனின் சடலமும், நீலப்பாவாடையும் வெள்ளைச்சட்டையும் அணிந்து தவனேஸ்வரியின் சடலமும் வைக்கப்பட்டு தலைப் பக்கத்தில் குத்துவிளக்கு எரிந்துகொண்டிருக்கிறது மக்கள் மாணவர்கள் வரிசையாக சென்று அஞ்சலி செலுத்தினர்கள்.

நேற்று நண்பகல் வடமராட்சிப் பகுதியிலிருந்து ஐந்து வ. பி, போ. ச. பஸ்களில். பெண்கள், மாணவர்கள், வயோதிபர்கள் உட்பட சுமார் 800 பேர் வந்து. பல்கலைக்கழகத்தில் தங்கியுள்ளார்கள்

நேற்றுமுன்தினம், வடமராட்சிப்பகுதியிலிருந்து ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக வந்த சுமார் 750பேரில், பெரும்பாலானோர் பல்கலைக்கழகத்தில் தங்கியுள்ளார்கள். இவர்களுக்கு பொதுமக்களும், மாணவர்களும் உணவு வழங்கினர்கள்.

அனுதாபம் தெரிவித்து பல துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகத்தில் வடமராட்சியிலிருந்து வந்து தங்கியிருப்பவர்களில் அதிகமானோர் தாய்மார்களும் மாணவிகளுமாவர்

இன்று காலை ஒன்பது மணி வரை மக்கள் அஞ்சலிக்காக சடலங்கள், பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள தகரக் கொட்டகையில் வைக்கப்பட்டிருக்கும். இன்று காலை 9-30மணிக்கு சடலங்கள் யாழ் நகரவீதிவழியாக ஊர்வலமாக வடமராட்சிக்கு எடுத்துச்செல்வதற்கான ஒழுங்குகளை, வெகுசன ஸ்தாபனங்களின் அமைப்புக்குழு செய்துள்ளது.

## தமிழ்த்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைத்தூதுவர் ஜனுப்தாஸிமைச் சந்தித்தபோதே ஜனுப் அரபாத் மேற்படி கருததை வெளியிட்டார்.

லெபனுனிலோ அல்லது வேறு எந்த இடங்களிலோ தாம தமிழ் தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளிக்கவில்லை என்பதை இலங்கை அரசிடம் தெரிவிக்கும்படி அவர்கேட்டுக் கொண்டார்.

இலங்கையில் சமாதானமும, அமைதியும் ஏற்பட தாம் பிரார்த்திப்பதாகவும், பஹாமாஸில் ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன விடுத்த அழைப்பை ஏற்று தாம் விரைவில் இலங்கை வரவுள்ளதாகவும் அவர் கூறினுர். [ச]

## சுவிஸ்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கையில் தற்போது நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளதாலேயே இந்த ஸ்தாபனங்கள் இந்தக் கொரிக்கையை நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ நா மனித உரிமைகள் ஸ்தானத்தின் 95 வது கூட்டத்தில் வெளியிட்டதாக அறிவிக்கப்பட்டது.

## ஓராண்டு நினைவஞ்சலி



**அப்புக்குட்டி கந்தசாமி**

(மல்லாகம் ஈஸ்வரி மர அரிவு ஆலை உரிமையாளர்)

**தோற்றம்: 05-02-1951**
**மறைவு: 14-03-1985**

அன்புடனே எங்கள் குடும்பத்தில் ஒளிவிளக்காயிருந்து எம்மை வாழ வைத்த தெய்வமே! மின்னுமல் முழங்காமல் சொல்லொணுத்துயரில் ஆழ்த்தி விட்டு மறைந்தீர்களே! எம்மை விட்டகன்று ஒரு வருடம் மறைந்தாலும் உம்நினைவு எம்மை விட்டகலாது உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

நினைவில் வாழும்.
மனைவியும், மகளும்.
அம்பனை,
தெல்லிப்பளை.

C 1225

**எம்பயர் திரையில்**
10-30, 2-30, 6-30
விஜயகாந்த் - சத்தியராஜ்
**கரிமேடு கருவாயன்**

LIDO Jaffna
THE STORY OF THE DOLLS
Colour
(Strictly for Adults)

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா கவுண்டமணி
நடித்த
**நான் பாடும் பாடல்**
(கலர்)

## உடனடித்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களையும் பெரும்பான்மை சமூகத்தவர் அலட்சியம் செய்தமையே'' என்று திரு ரொமேஷ் பண்டாரி மேற்படி கவுன்சில் கூட்டத்தின் ஆரம்ப உரையில் மேலும் தெரிவித்கார்.

கேள்வியொன்றுக்கு அவர் பதிலளிக்கையில், இன பிரசனையை அணுகுவதில் இலங்கை அரசுக்குள்ள இயலாமையே இன்று வன்செயலைத்தோற்றுவித்துள்ளது இன்று இந்திய வெளியுறவுச்செயலா கூறினுர். (ஷ)

## ஹெலிகொப்டர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மூன்று பெண்கள் உட்பட 8 வயதுச் சிறுவன் ஒருவனும் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்றுக் காலை 11 மணியளவில் பயிலிட்டிப் பகுதியிலுள்ள 'கிராமக் கோட்டடி' என்றழைக்கப்படும் 'அக்கந்தனை'யில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

### தாக்குதல் முயற்சி

நேற்றுக்காலை பயிலிட்டிப் பகுதியில், ஹெலிகொப்டர் மீது தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்தே ஹெலிகொப்டரிலிருந்து பரவலாக துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

மயிலிட்டி, வறுத்தலைவிளான், குரும்பசிட்டி, கட்டுவன் பகுதிகளிலும் ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் பல மணித்தியாலங்களாக நடத்தப்பட்டது.

மயிலிட்டியிலுள்ள வீட்டில் வெங்காயம் பிடிகட்டிக்கொண்டிருந்தவர்கள் மீதும், தோட்டத்தில் வெங்காயம் அறுவடை செய்துகொண்டிருந்தவர்கள் மீதும் ஹெலிகொப்டர் பலதடவை தாளப்பறந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தது

அவ்வீட்டிலிருந்த இரத்தினம் சுமதி 1, வயது], இரத்தினம் ஸ்ரீதரன் [5 வயது], மாணிக்கம் வேலாயுதம் (ஒன்றரை வயது) ஆகியோர் மூவர் சிதறியநிலையில் ஸ்தலத்திலேயே பலியானுர்கள்

மற்றும் மயிலிட்டியைச் சேர்த்த கடுந்தவம் என்பவரின் மகன் ஒருவரும் பலியானுர். இவர் அண்மையில் சவூதியிலிருந்து இங்கு வந்து சேர்ந்தவராம்.

ஒன்றரை வயதுக் குழந்தையின் சடலம் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது

இக்குழந்தையின் தாயாரான மாணிக்கம்ராசாத்தி[27வயது] இடது கண்ணை இழந்தநிலையில் யாழ். ஆஸ்பததிரியில் சிகிச்சைபெற்று வருகிறுர்

தோட்டத்தில் வெங்காய அறுவடைசெய்த செல்வராசா யோகம்மா [30 வயது] இவரது மகன் சிவகுமார் [8வயது] இரத்தினம் சாந்தி [18 வயது] படுகாயங்களுடன் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

காயமடைந்த யோசம்மா தனது கணவனை 6 வருஷங்களுக்கு முன்னர் பறிகொடுத்தவர் என்றும், தனதுசகோதரரின் தோட்டத்தில் வேலை செய்து அதிலிருந்துவரும் ஊதியத்தில் தமது 4 பிள்ளைகளுடன் சீவியம் நடத்திவருவவாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இவர்களிலிருந்த வீடும் பாதிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் ஹெலிகொப்டரிலிருந்து 'மோட்டர் ஷெல்' தாக்குதலால் ஏழாலை பேற்கைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை என்பவரின் வீடும், சு அருணுசலம் என்பவரின் சைக்கிள் கடையும் பலத்த சேதமடைந்துள்ளன.

நேற்று இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தால் பலாலி முகாமை அண்மித்த கிராமப் பகுதிகள் பதற்றநிலைக்குள்ளானது

நூற்றுக்கணக்கானோர் தங்கள் வீடுவாசல்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர்; [மா]

## ஆசிரிய பரம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நிதி, பண்டிதமணி சி கணபதப்பிள்ளை அவர்களது மறைவையொட்டி, வெளியிட்டுள்ள இரங்கற் செய்தியில் யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளர், இ சுந்தரலிங்கம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

''இன்றைய தமிழ் ஆசிரியர் உலகில் பெரும்பகுதியினர் பண்டிதமணிஐயா அவர்களினுல் உருவாக்கப்பட்டவர்கள் ஐயா அவர்கள் ஆசிரியர் பரம்பரையை உருவாக்கிய கல்விப் பெருங்கடல். அவர் பழமைக்கும் புதுமைக்குப் ஓர் இணைப்புப் பாலம். திண்ணைப் பள்ளியில் கல்வியைத் தொடங்கிய அவர், நாவலர் பாடசாலையிற் தொடர்ந்தார். சைவாசிரிய கலாசாலையில் தமிழ்ப் பேராசானுக வீற்றிருந்து கல்விக் கதிரைத் திசையெங்கும் பரவவிட்டார் இலக்கியத்திலும், பழமையையும் புதுமையையும் தெரிந்து, புரிந்து உணர்ந்த ஒருவராக நம்மிடையே நடமாடினுர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அன்னுருக்கு இலக்கியக் கலாநிதிப் பட்டத்தை வழங்கி தானும் பெருமைகொண்டது. ஐயா அவர்களின் இறுதிக் கிரியைகள் அவர்களதுதமிழ்பணியில் இன்று நடைபெறுகின்றது. யாழ் மாவட்டத்தில அமைந்துள்ள சகல பாடசாலைகளும் இன்றைய பிரார்த்தனையில் ஐயா அவர்களின் ஆத்ம சாந்திக்காக அஞ்சலிக்க வேண்டுவதுடன், ஐயா அவர்களின்சிறப்பியல்புகளை எமது மாணவமணிகள் தெரிந்துகொள்ளக் கூடியதாக உரைகள் நிகழ்த்தப்பட வேண்டும்'' என்று கல்விப் பணிப்பாளர் தமது இரங்கற் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி,
தமிழ்த்தவ முனிவர்

**உயர்திரு. சி. கணபதிப்பிள்ளை**

அவர்களுக்கு எமது

**கண்ணீர் அஞ்சலி**

தோற்றம: 27-06-1899 சிவபதம்: 13-03-1986

''எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிலென்று சங்கே முழங்கு'' என்று ஆர்ப்பரித்த சங்கநாதம் ஓய்ந்துவிட்டது. சங்கத்தமிழைக் காட்டி எம்மொழியும் நம்மொழிக்கு இணையாகுமா என்று கேட்ட செந்தமிழ்க் காவலர் மறைந்து விட்டார் எம்மூரின் பேரொளியாய் பெருமை தேடித்தந்த மூதறிஞர் சைவக்காவலன் இலக்கிய கலாநிதிக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

கலாமன்ற சனசமூக நிலையம்,
திருநெல்வேலி.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

C-1232

## மத்தியஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிலுள்ள வெளிநாட்டு அரசியல் அவதானிகள் கருதுவதாகவும் மேற்படி செய்தி கூறுகிறது. (ஷ)

## 6 பேர் பலி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தல் நடாத்தியதில் 6பேர் பலியானதுடன் மூவர் படுகாயம் அடைந்ததாக 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

'நேற்றுமுன்தினம் காலை 11மணியளவில் இ தாக்குதல் இடம்பெற்றதாகவும் சந்தளாய்-ஹறணை வீதியில் சிந்தளத்தை என்னும் கிராமத்தில் ஜீப்பில் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர் மீதானதாக்குதலை தமது இயக்கத்தைச் சேர்ந்த 3 போராளிகளே மேற்கொண்டிருந்ததாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மா)

## பத்திரிகை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கங்களும் உத்தரவாதம்அளிக்கவேண்டும்'

முத்திரைச்சந்தையில் நடந்த துப்பாக்கிச் சூட்டின் பின்னர் ஊர்வலத்தில் சென்றவர்கள் தேவாலயத்தில் தஞ்சமடைந்தபோது அமைக்கப்பட்ட வெகுஜன ஸ்தாபனங்களின் அமைப்புக்குழு, நேற்றுக்கூடி எடுத்த தீர்மானத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை சகல இயக்கங்களும், உத்தரவாதம் வழங்குவதற்கு இம்மாதம் 15ம் திகதி நண்பகல் 12 மணிவரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள 7 கோரிக்கைகளும் வருமாறு;

''பொது எதிரிக்கு எதிராக போராடிய போராளிகள் அறுவர் கொல்லப்பட்டிருக்கின்றனர். அதே சம்பவத்தில் அபாயகரமான நோயாளிகளுள்ள யாழ். பெரிய சுப்பத்திரியில் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் பொதுமக்களில் ஒருவர் இறந்தும் ஒருவர் காயமடைந்துமுள்ளனர் மேலும் வேறுபல சந்தர்ப்பங்களில் போராளிகள் அநியாயமாக தமது உயிர்களை அகபுறஇயக்க முரண்பாடுகளில் இறந்துள்ளார்கள். இனிமேலும் எந்த தாபனத்தினுலும் இத்தகைய கொலைகள் நிகழாதெனஎல்லா தாபனங்களும் உறுதி செய்ய வேண்டும்,

பொதுமக்கள் பல்வேறு இடங்களிலும் வைத்து இம்சைப்படுத்தப்பட்டுள்ளார்கள். ஊர்வலத்தில் பங்குபற்றிய மக்கள் அடித்துநொறுக்கப்பட்டிருக்கிறுர்கள். இப்படியான செயல்கள் இனிமேல் நடைபெருதிருக்க எல்லா விடுதலை தாபனங்களும் உத்தரவாதமளிக்கவேண்டும்.

'பாஸ்கரன், வசந்தன் மற்றும் ஊர்வலத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

நிராயுதபாணிகளாக நியாயம்கேட்டு ஊர்வலம் வந்த மக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம மேற்கொள்ளப்பட்டது சம்பந்தமாக தமிழீழ விடுதலை இயக்கம் விடுத்த பொய்யான அறிக்கை வாபஸ்பெறப்பட்டு பொதுமக்களிடம பகிரங்கமாக மன்னிப்புக்கேட்கப்படவேண்டும்.

'பொதுமக்கள் மீதுஆயுதம் திருப்பப்பட்டதலும் ஏனைய பல போராளிகளுடைய உயிருக்கு ஆபத்து விளையக்கூடிய சத்தியக்கூறு இருப்பதாலும் ஏனைய இயக்கங்கள் இவ்விடயததில்தலையிட்டு நியாயமான தீர்வுக்கு உத்தரவாதமளிக்க வேண்டும்.

இனி எந்தக்காலததிலும் எநதவொரு விடுதலை ஸ்தாபனத்தாலும் எந்தவொரு அராஜகச்செயலும்நடைபெருதென்றும், மீறி நடைபெறின் மக்கள்முன் பகிரங்கமாக தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டும என்றும் சகல விடுதலை ஸ்தாபனங்களும் உத்தரவாதமளிக்க வேண்டும்.

## இன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

குழந்தை இலக்கியம் தொடர்பான கருத்தரங்கொன்று இன்று காலை தெல்லிப்பழை யூனியன்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்

இதுகுறித்து கருத்துரைகளை முறையே 'குழந்தைக் கவிதைகளில் ஓசை' என்னும் பொருளில் பேராசிரியர் அ. சண்முகதாஸும், 'நாட்டார் பாடல்களில் சிறுவர் பாடல்கள்' என்னும் விஷயம் குறித்து கலாநிதி இ. பாலசுந்தரமும். 'ஈழத்தில் குழந்தை இலக்கியமரபு பற்றி கலாநிதிநா, சுப்பிரமணியமும் உரையாற்றுவார்கள். (நா)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# ‘மக்கள் சக்தியை உணர்ந்தவர் நாம்’

(யாழ்ப்பாணம்)

‘‘மக்கள் சக்தியின் பூரண வலிமையை உணர்ந்தவர்கள் நாம். எனினும் தற்சமயம் போகும்ஊர்வலமானது திட்ட மிட்ட சதிகளுக்கு உள்ளாக லாம். இவ்வூர்வலமானது எவ் வித தடங்கலுமின்றி சந்தர்ப்ப வாதிகளின் சதிகளுக்கு பலியா காமல் அப்பகுதி மக்களின் மனோநிலையை சரிவர வெளிக் கொணர வேண்டும். அவர் களின் மனோநிலையைப் பாதிக் கும் எவ்வித நடவடிக்கைகளை யும் நாம் மேற்கொள்ளமாட் டோம் என உறுதியளிப்ப துடன் சந்தர்ப்பவாதிகளின் சதிகள்பற்றி எச்சரிக்கையுடன் இருக்குமாறு ஊர்வலத்தில் பங்குகொள்ளவிருக்கும் மக்க ளைக் கேட்டுக் கொள்கின் றோம்’’.

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்று மேற்கண்ட வாறு கூறுகின்றது இவ்வறிக் கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

தமிழீழ விடுதலை இயக்கத் தில் இணைந்துசெயலாற்றிவந்த தாஸ் குழுவினரின் அராஜகம் அண்மைக்காலங்களில் எல்லை மீறியதைத்தொடர்ந்துநாமும் கடுமையாக நடக்க வேண்டி ஏற்பட்டது- அவ்வாறு கடுமை யான போக்கை நடைமுறைப் படுத்துவதன் மூலமே அராஜக ஆயுதக்கும்பலை கட்டுப்படுத் தக் கூடியதாகவிருந்தது. இவர் களை கூடிய விரைவில் முற்று முழுதாக கட்டுப்படுத்துவதன் மூலமே அராஜகத்தை அகற்ற முடியும்.

# ● “பெண்கள் மானபங்கப்படுத்தப்படும்போது அஹிம்சையைப் பற்றிய பேச்சு அர்த்தமற்றது!”

## தமிழர் விடுதலைக் கூட்டணி அறிக்கை

(சென்னை)

‘‘தமிழ்ப் பெண்கள் மான பங்கப்படுத்தப்படும் போது அஹிம்சையைப் பற்றி இலங்கை ஜனாதிபதிபேசுகின்ற பேச்சுக்களில் எதுவித அர்த்த மும் இருப்பதாகத் தெரிய வில்லை’’

தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல்குழுக் கூட்டத்தை அடுத்து வெளியிடப்பட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப்பெண்கள் ஆயுதப் படையினரால் மானபங்கப் படுத்தப்படுவதற்கு தங்க வேலாயுதபுர சம்பவம் நல்ல தோர்உதாரணம்என்றும் மேற் படி சம்பவத்தில்மட்டும்கொலை செய்யப்பட்ட ஆண்களுக்காக உணவைத் தயாரித்துக்கொண் டிருந்த எட்டுப்பெண்கள் ஆயு தப்படையினரால் கற்பழிக்கப் பட்டதுமன்றி கொலைசெய்யப் பட்டுமுள்ளனர் என்று த. வி. கூட்டணி அறிக்கை மேலும் கூறுகின்றது.

இவ்வாறான நடவடிக்கை களில் சம்பந்தப்பட்ட படைப் பிரிவுகள் உடனடியாக வட, கிழக்குப் பகுதிகளிலிருந்து வாபஸ் பெறப்படவேண்டு மென்றும், எவ்வித காரணமும் மின்றி கைதுசெய்யப்பட்டு முகாம்களில் சித்திரவதைக் குள்ளாகும் தமிழ் இளைஞர்கள் விடுதலை செய்யப்படவேண்டு மென்றும் த. வி. கூட்டணி அறிக்கை கோரியுள்ளது.

(ஷ)

இலங்கைத் தமிழர் நிலை

# ஐ. நா. கமிட்டி முன் இந்தியா கவலை

(ஜெனிவா)

இலங்கையில் தமிழருக்கு எதிரான வன்முறைகள் பெருகிவருவதாகவும், அவர் கள் தராதரமற்ற விதத்தில் கொல்லப்படுவதாகவும் இந் தியா ஜெனிவாவில் கவலை தெரிவித்துள்ளது!

ஐ. நா சபையின் இனஒதுக் கல் ஒழிப்புக் கமிட்டியின் கூட் டத்தில் நேற்று உரையாற்றிய இந்தியப் பிரதிநிதி திருமதி சாந்தி சாதிக்கலி, இலங்கை யில் நிலைமை சீர்கெட்டு வரு வதையிட்டு இந்தியா கவலை யடைந்துள்ளதாகவும், இப் பிரச்னைக்குஇலங்கைஜனாதிபதி ஒரு அமைதித் தீர்வை விரை வில் காணுவார் என்று தாம் நம்புவதாகவும் தெரிவித்தார்

முன்னதாக இக்கூட்டத்தில் உரையாற்றிய இலங்கைப் பிரதிநிதியான துணை சொலி ஸிட்டர் ஜெனரல் உரையாற் றுகையில்; இனப்பிரச்னைக்கு தீர்வுகாணுதல்; தமிழ் தீவிர வாதிகளின் கையிலேயன்றி இலங்கை அரசின் கையில் அல்ல என்று கூறினர்.

இதனைத் தொடர்ந்து உரை யாற்றிய உறுப்பினர்கள் பலரும் இலங்கை அரசாங்கத் திடம் தமிழர் நிலை பற்றிய விளக்கங்களைக் கோரினர்

[வெ]

# அரிசிவிலை சரிகிறது

(பச்சிலைப்பள்ளி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அரிசியின் விலை வீழ்ச்சியடைந் துள்ளது.

ஒருகொத்து நாட்டரிசி 6 ரூபா 50 சதமாக விற்பனை யாகிறது

நெல்அறுவடையையடுத்தே அரிசியின் விலை அப்பகுதியில் வீழ்ச்சியடைந்துள்ளது.

# இன்று சான்றிதழ் வழங்கும்வைபவம்

(புத்தூர்)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியில் அமைந்துள்ள கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலையத்தில் வெள் ளிக்கிழமை காலை சான்றிதழ் வழங்கும் வைபவம், கோப் பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு ஆ. வ தங்கராசா தலை மையில் நடைபெறுகின்றது.

இந்நிலையத்தில் சுயவேலை வாய்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு நடைபெற்ற பனம் பொருள் கைப்பணிப்பயிற்சி யில் சித்தியடைந்த 2ம்,3ம்,4ம் குழுவினரும், உடைதயாரிப் புப் பயிற்சியில் சித்திபெற்ற 1ம், 2ம் குழுவினரும், முதல் உதவிப்பயிற்சியில் சித்திபெற் றவர்களும் நாளை சான்றிதழ் களைப் பெறவுள்ளனர்

விழாவில் யாழ்கல்விப்பணிப் பாளர் திரு இரா.சுந்தரலிங் கம் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளுகிறார். திரு வி எஸ். சுவாமிநாதன். திரு கே. சபாபதிப்பிள்ளை, திரு கு.கிட் ணர், திரு சி. சிவமகாராசா, கலாநிதி எஸ். மோகனதாஸ், திரு. சதா லோகேஸ்வரன். திரு. எஸ். சிவராஜா, செல்வி தி. பெரியதம்பி, திரு. கே. எஸ். கார்த்தி ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப் பிக்கின்றனர். இவ்வைபவ த்தை கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவளநிலையப்பொறுப் பதிகாரி திரு. எஸ். சி. எஸ். சிதம்பரநாதன் ஒழுங்கு செய் துள்ளார்.

# “நேர்மை தவறாது கடமை புரிந்தவர்”

(யாழ்ப்பாணம்)

‘‘மிகவும் கடமையுணர்வுட னும், நேர்மையுடனும் பணி வுடனும் நீண்டகாலமாக ‘ஈழநாடு’ ஸ்தாபனத்தில் பணிபுரிந்த திரு. பெரியதம்பி அவர்களின் திடீர்மறைவுஎமது ஸ்தாபனத்துக்குப் பேரிழப்பா கும்’’ என்று ஈழநாடு’ பத்தி ரிகை ஸ்தாபனத்தில் 25 ஆண் டுகளாக கடமையாற்றிநேற்று முன்தினம் மரணமான திரு. சி பெரியதம்பியின் இறுதிக் கிரியைகளில் ‘ஈழநாடு’பொது முகாமையாளர் திரு. து. சீனிவாசகம் இரங்கலுரை ஆற் றுகையில் குறிப்பிட்டார்.

‘ஈழநாடு’ ஸ்தாபன ஊழி யர்கள் அனைவரும் அவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டனர்,

இப்பத்திரிகை ‘‘ஈழநாடு’’ லிமிட்டெட் ஸ்தாபனத்தா ரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126,

## வடபகுதி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி பத்தி ரிகையாளர் மகாநாட்டில் நேற்றுக் கூறினர்.

தேசியபந்தோபஸ்து அமைச் சில் நேற்றுப்பிற்பகல் 2-15க்கு மேற்படி பத்திரிகையாளர் மகாநாடு நடைபெற்றது. அமைச்சர் திரு. லலித் அத்து லத்முதலி மேலும் தெரிவித்த தாவது:

‘‘வடபகுதி தீவிரவாதிகள் தமது வன்செயல்களை நிறுத்த ஏதுவாக இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

‘‘தமிழ்நாடு சென்ற அகதி கள் இலங்கை திரும்ப விரும்பி னல் அரசு அதற்கு ஏற்றவசதி யைச் செய்யத்தயாராக உள் ளது

‘‘எதிர்வரும் சனிக்கிழமை தொடக்கம் காலை எட்டுமணிக் கும் பிற்பகல் நான்குமணிக்கு மிடையே அவர்கள் இராமேஸ் வரத்திலிருந்து தலைமன்னர் வழியே இலங்கை வரலாம். அவர்கள வழமையான சோத னைகளுக்கு உட்படுத்தப்படு வார்கள்.

‘‘கிழக்கு மாகாணத்தில் விமானத்தாக்குதல்களை நாம் கடுமையாக மேற்கொள்ள வில்லை. அங்கு நிலைமைகள் ஆயுதப்படையினரின் கட்டுப் பாட்டுக்குள் இருப்பதே இதற் குக் காரணமாகும். அடுத்த 5—6 வாரத்துக்குள் கிழக்கு மாகாணத்தில் பூரண பாது காப்பு நிலையை ஏற்படுத்தமுடி யும் என்று அரசாங்கம் நம்பு கிறது.

இந்திய வெளியுறவுச் செய லர் திரு. ரொமேஷ் பண்டாரி க்கு இலங்கை அரசு விடுத்த அழைப்பு வாபஸ் பெறப்பட வில்லை ஜனாதிபதி இதனை ஊர்ஜிதம் செய்துள்ளார்.

வன்செயல்கள் நிறுத்தப் பட்டு பேச்சுவார்த்தைகளுக் கான சூழ்நிலை ஏற்படுமானல் பிரிவினைக்கோரிக்கையை வலி யுறுத்தாத சில தீவிரவாதக் குழுக்களுடன்பேச்சுவார்த்தை களை ஆரம்பிக்கக்கூடியதாக இருக்கும்.

வடகிழக்கு இணைப்பேபேச்சு வார்த்தைகளுக்கு முக்கிய தடையாக உள்ளது இத்தடை நீக்கப்பட்டதும் அதிகாரப் பரவலாக்கம் பற்றி பேச்சு வார்த்தைகளை நடாத்தக் கூடியதாக இருக்கும் என்று அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறினர்.

இதேசமயம் அரசு விடுத்த அறிக்கை ஒன்றின்படி 1985 ஆகஸ்ட் 30ம் திகதி இந்திய அரசின் ஆலோசனைப்படி வகுக்கப்பட்ட நகல் அடிப் படையிலேயே பேச்சுவார்த் தைகள் நடாத்தப்படவேண் டும் என்று குறிப்பிடப்பட்டுள் ளது. (ச)

# மரண அறிவித்தல்

## இலக்கியகலாநிதி, பண்டிதமணி, சி. கணபதிப்பிள்ளை அவர்கள் சிவபதம் எய்தினர்

முதுபெரும் தமிழ்அறிஞர், இலக்கியகலாநிதி, பண் டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் சிவபதம்எய்தி விட்டார்கள். அன்னரின் ஆன்மசாந்திக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (14-03-86) நண்பகல் 12 மணி யளவில் திருநெல்வேலி கலாசாலை வீதியிலுள்ள அன் னரது இல்லத்தில் நடைபெறும். ஆன்மசாந்திக்கிரியை களின் பின்னர் அன்னரின் பூதவுடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக திருநெல்வேலி கலாமன்றத்தில் பிற்பகல் 2 மணி தொடக்கம் வைக்கப்படும். பிற்பகல் 4 மணி யளவில் திருநெல்வேலி மயானத்தில் இறுதிக் கிரியை களும், தகனக்கிரியைகளும் நடைபெறும். (A 365)

## நயினாதீவு வள்ளியம்மை குமாரசாமி

நயினாதீவு வள்ளியம்மை- குமாரசாமி காலமானர். இவர் பிரபல வர்த்தகர் சு. குமாரசாமியின் துணைவி யாரும், முன்னாள் சர்வோதய ஊழியர் சபாநாதன், ஸ்ரீதரன் (சுவிஸ்), ஸ்ரீபதி [ஜேர்மனி], திருமதிகள் பத்மாசனிதேவி, மங்களேஸ்வரி [ஆசிரியை], தவ மணிதேவி, நிர்மலாதேவி, லலிதாம்பாள், செல்வி அருள்மொழி [யாழ். அரசினர் வைத்தியசாலைத்தாதி] ஆகியோரின் தாயாரும், நயினை மகாவித்தியாலய அதிபர் சண்முகநாதபிள்ளை, நயினை யாழ். அபிவிருத் திச் சபை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் தில்லைநாதன், வவனியா குளோப் றேடஸ் இராசலிங் கம், சிவானந்தன் [ஜேர்மனி], தவமலர் சபாநாதன் ஆகியோரின் மாமியாரும், வித்துவான் சி.குமாரசாமி, முன்னாள் வவனியா உதவி அரசாங்க அதிபர் சி. கதிரவேலு, காலஞ்சென்ற ஆசிரியை இராசம்மா புவனசுந்தரம் ஆகியோரின் சகோதரியுமாவார். இறு திக்கிரியைகள் 14- 3- 86 வெள்ளிக்கிழமை நயினாதீவில் நடைபெறும். [C 1229]

## ஜேம்ஸ் தம்பு

ஜேம்ஸ் தம்பு (கல்வித்திணைக்களம் யாழ்ப்பாணம்) (முன்னாள் பெருந்தெருக்கள் திணைக்களம், வவனியா) காலமானர். அன்னர் சருஜவதியின் (ஆசிரியை, றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலை, கொழும் புத்துறை), அன்புக் கணவரும், தர்மசேனன், நிமல சேனன், ஜெபசேனனின் (மாணவர்கள், பரியோவான் கல்லூரி) அன்புத்தந்தையும், காலஞ்சென்ற M. தம்பு, திருமதி தம்புவின் (சங்குவேலி வடக்கு) அன்புமகனும், திரு. A. C, நல்லையா (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்), காலஞ் சென்ற திருமதி நல்லையாவின் மரு மகனும், கனம் சாம் தம்பு (பண்டத்தரிப்பு C. S. I. திருச்சபை), திருமதி எமிலி சபாபதி, திரு T. அருட் பிரகாசம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்), காலஞ்சென்ற T ஜெயரத்தினம், திருமதிகள் நேசம்மா சிங்கராசா, பாக்கியம் ஜோன்ராசா, ஞானம் புனித ராசா, தவமணி கபிரியேல்பிள்ளை அவர்களின் அன் புச் சகோதரனும், திருமதி தங்கராணி ஜெயரத்தினம், இராசமணி தம்பு (ஆசிரியை, பண்டத்தரிப்பு பெண் கள் கல்லூரி), Dr T. சிங்கராசா, திரு S. சபாபதி, காலஞ் சென்ற திருவாளர்கள் E. N. புனிதராசா (தேசிய சேமிப்பு வங்கி). A. ஜோன்ராசா, திரு. P. கபிரியேல்பிள்ளை (G. S. O.), திருமதிகள் மனோரஞ் சிதமலர் அருட்பிரகாசம், புனிதம் நேசதுரை, திலக வதி அபயசேகரா (அதிபர், பாக்கியவித்தியாலயம் மாத்தளை) நளாயினி, திருமதி வாசுகி கிச்கொக் (லண் டன்) அவர்களின் மைத்துனருமாவார் அன்னரின் நல் லடக்க ஆராதனை 15-3-86 சனிக்கிழமை பி. ப. 3 மணிக்கு அன்னரின் கொழும்புத்துறை வீதி, இல் லத்தில் நடைபெற்று பரியோவான் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.
60, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி. (C 1228)